(இல: 35) எழுதிய சிவரமணியின் கவிதைகள் விமர்சனத்தின் தற்கொலை என்ற கட்டுரையில் ஒசையில் பிரசுரமாகிய ''இருட்டு அவசரம்...'' என்ற இக்கவிதையை மேற்கோள் காட்டியும் தனது கருத்தை வலியுறுத்த முனைந்தார். அத்துடன் ஜேர்மனியைச் சேர்ந்த 'நூல்' எனும் வெளியீட்டாளர்கள் 1992இல் சிவரமணி கவிதைகள் என்ற தலைப்பில் எட்டுக் கவிதைகளைக்கொண்ட தொகுதியொன்றை வெளியிட்டனர். இத்தொகுதியிலும் நான் மேலே குறிப்பிட்ட ஜபாருடைய கவிதையைச் சிவரமணியினுடையது என நினைத்துச் சேர்த்துள்ளனர்.

ஒரு எழுத்தாளர் மறைந்தபின் அவரது 'பாடங்கள்' (texts) தொடர்பான பல சிக்கல்கள் தோன்றக்கூடும் என்பதையே மேற்கூறிய சம்பவங்கள் காட்டுகின்றன. இப்போது எம்மிடம் எஞ்சியுள்ள சிவரமணியின் கவிதைகள் யாவற்றையும் ஒரு தொகுதியாகப் பிரசுரிக்க வேண்டும் எனப் பெண்கள் ஆய்வு வட்டம் தீர்மானித்தமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

▭

சிவரமணி யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகக்கொண்டவர். பெற்றோர் இருவருமே ஆசிரியர்கள். குடும்பத்தில் இரு பெண் பிள்ளைகள். சிவரமணி மூத்தவர். சிவரமணியின் தந்தையார் சிவானந்தன் அரசியல் இலக்கிய ஈடுபாடு கொண்டவர். குறிப்பாக

இலக்கியத்தில் மாத்திரமன்றி பெண்கள் அதிகம் கைவைக்காத, அல்லது ஈடுபாடுகொள்வர் என எதிர்பார்க்கப்படாத நவீன ஓவியத் துறையிலும் சிலர் பிரவேசித்தனர். 1986ஆம் ஆண்டு யாழ். பல்கலைக் கழகக் கலாசாரக் குழு நடத்திய மூன்று இளம் பெண்களது ஓவியக் கண்காட்சி இதற்குச் சான்றானது. அருந்ததி சபாநாதனும், வாசுகி ஜெகநாதனும் குறிப்பிடக்கூடிய ஓவியர்களாக வளர்ந்ததும் இக்காலத்தில்தான். பெண்களது இந்தக் கலை இலக்கிய வெளிப்பாடுகள் சமகாலத் தமிழ்க் கலை இலக்கியப் பரப்புக்கு ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்த்தன; அதன் பொருட் பரப்பை விசாலித்தன. பெண்கள் தமது சமூக நிலைமை, இருப்பு முதலியவைபற்றித் தமது கண்ணோட்டத்தில் கருத்துக்களையும், உணர்வுகளையும் வெளியிடும் நிலை ஒரு புதிய அம்சமாயிற்று. முன்பு பேசப்படாத பல விடயங்கள் இலக்கியத்தில் பேசப்படத்தொடங்கின. பெண்களது பிரச்சனைகளை அவற்றிலும் குறிப்பாகச் சீதனம், கல்வியின்மை போன்றவைபற்றியே அதிகளவில், சீர்திருத்த நோக்கில் பேசுவதே வழக்கமாயிருந்த தமிழ் இலக்கிய உலகில் இது ஒரு திடீர்த் திருப்பமாயிற்று. ஆண் பெண் அசமத்துவ உறவின் வெவ்வேறு பரிமாணங்கள், பெண்களது வாழ்வில் இவற்றால் ஏற்படும் பாதிப்புகள் ஆகியவைபற்றிய பெண்நிலைக் கருத்துகள் சிறிய அளவிலாயினும் இலக்கிய ஆக்கங்களில் இடம்பெற்றன. ஆணாதிக்கம், பெண் ஒடுக்குமுறை என்ற

கருத்துநிலை தாராண்மைத் தன்மையுடைய தாய் அமைந்துள்ளதா? எத்தகைய தடைகளை அவர்கள் வழியில் அது ஏற்படுத்துகிறது? என்பவை முக்கியமான வினாக்களாகும். இதுபற்றிய சமூக, கருத்துநிலை ஆராய்ச்சி விரிவாக்கத்திற்கு இது இடமன்று. எனினும் சுருக்கமாக ஒன்று கூறலாம். சுதந்திர எண்ணமும், ஊக்கமும் கொண்டவர்கள், குறிப்பாகப் பெண்கள் தமது மூச்சுத் திணறுவதுபோல உணரும் ஒரு பாலைவனச் சூழலே இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் பல தளங்களிலும் முதன்மையாகக் காணப்படுகிறது. இடையிடையே தளிர்விட முயலும் புதிய சிந்தனைகள், முற்போக்கான ஆர்வங்கள், முயற்சிகள் பலத்த நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. இது பொதுவான ஒரு விரக்திக்கும், செயலின்மைக்கும் வழிகோலக்கூடிய அபாயத்தை உள்ளடக்கியது. இதுகுறித்துச் சமூகத்தின் கல்விமான்கள், சமூக சீர்திருத்தவாதிகள், ஆசிரியர்கள், கலைஞர்கள், அரசியல்வாதிகள் யாவரும் அக்கறைப்படல்வேண்டும்.

பொதுவாகவே எண்பதுகளின் ஆரம்பத்தில் பெண்களிடையே குமிழியிட்ட புத்தார்வமும், செயலூக்கமும் பிற்பகுதியில் குறைந்துபோனமைக்குச் சில அரசியற் காரணங்களும் இருந்தன. குறிப்பாக '87ஆம் ஆண்டிற்கு முன்னர் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தபோதிலும் பெண்கள் அமைப்புகள் உற்சாகமாகச் செயல்பட்டன. நான் முன்னர் குறிப்பிட்ட பெண்கள் சஞ்சிகைகள் 84, 85, 86ஆம்

ஆண்டுகளில் வெளிவந்தவையாகும். தேசிய விடுதலை என்ற கருத்தாக்கப் பின்னணியும் இவை யாவற்றுக்கும் ஏற்புடைமையையும் உற்சாகத்தையும் அளித்திருந்தது.

ஆனால் எண்பதுகளின் நடுப்பகுதியிலிருந்து தேசியக் குழுக்களிடையே வளர்ந்துவந்த எதேச்சாதிகாரப் போக்கு, வெளிப்படையாகவே தென்பட்ட அதிகாரத்திற்கான போட்டி ஆகியவை ஜனநாயகத்தன்மைக்குக் கெடுதி விளைத்ததுடன், குழுக்கள் எதனையும் சாராமல் பொதுவான தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தவர்கள் பலரையும் விரக்தியடையச் செய்தன. அத்துடன் '87இன் பிற்பகுதியில் இந்திய அமைதிப் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தம், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடி நிலை சமூகத்தில் சுயாதீனமான அமைப்புகள் சுதந்திரமாக இயங்கத்தக்க சூழலை இல்லாமற் செய்தன. அத்துடன் 1990 ஜூன் நடுப்பகுதியில் மீண்டும் ஏற்பட்ட போர் நிலைமை, தேசிய விடுதலை இயக்கங்கள் எனக் கூறிக்கொள்பவற்றின் எதேச்சாதிகாரம், வன்முறைகள் ஆகியவற்றால் முன்பு இயங்கிய பல அமைப்புகள் செயலிழந்தன. அல்லது அவற்றின் செயற்பாடுகள் மிகவாகக் குறைந்தன. மாற்றுக் கருத்துகளுக்கு முகங்கொடுத்தல், விமர்சனத்திற்குச் செவிசாய்த்தல், பொது வேலைத் திட்டங்களில் ஒன்றிணைதல் ஆகியவற்றுக்கு இடமில்லாதுபோயிற்று. இது சமூகத்தில் பின்னுக்

குத் தள்ளப்பட்டிருந்த சில பிற்போக்கான கருத்துகளும், சக்திகளும் துணிவாக வெளிப்படக்கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்கியது. குறிப்பாகப் பெண்களிடையே ஊற்றெடுத்த உற்சாகம், செயலூக்கம் ஆகியவற்றுக்கு ஆரம்பத்தில் தேசிய விடுதலை என்ற கருத்துநிலை வழங்கியிருந்த ஏற்புடைமையின் காரணமாக அவற்றைத் துணிந்து எதிர்ப்பதற்குத் தைரிய மற்றிருந்த பழமைவாதச் சக்திகள் துணிவாக வெளிப்படத்தொடங்கின.

ஒரு உதாரணத்தை மாத்திரம் இங்கு குறிபபிட விரும்புகிறேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அதன் ஆரம்பத்திலிருந்தே பல முற்போக்கான அரசியல், சமூக, கலாசார செயற்பாடுகளின் தளமாக இயங்கிவந்துள்ளது. தமிழ்த் தேசியவாதத்தின் முற்போக்கான ஒட்டங்கள் இக்கல்வி நிறுவனத்தில் சங்கமித்ததை எவரும் மறுக்கமுடியாது. அவ்வாறே பெண்களது பல முற்போக்கான செயற்பாடுகளுக்கும் இது ஆதரவளித்துவந்தது. ஆனால் சமூகத்தில் முன்னுக்கு வந்த சமூகப் பழமைவாதம் பல்கலைக்கழகத்திலும் பிற்காலத்தில் தலைகாட்டியது. 1989ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தில் பெண்களின் விழிப்புணர்வுக்கும், பெண்நிலைவாதத்திற்கும் எதிரான பிற்போக்குச் சக்திகளின் குரல் வெளிப்படையாக ஒலித்தது. பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்ற புதிய மாணவிகளின் ஆடை அணிதல் முறைக்குச் சிரேஷ்ட மாணவர்கள் (ஆண்கள்) விதிக்கும் சில கட்டுப்பாடுகளில் ஆரம்பித்து பெண்

